**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | CC 232/2019 |
| Name | : | Ramachandran |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 2 மற்றும் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் தாலூக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 06.01.2018 ம் தேதி கொமரலிங்கம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது காலை 04.00 மணிக்கு நானும், காவலர் 1801 நாராயணசாமி என்பவரும் ரோந்து அலுவலில் இருந்த போது உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களுக்கு மணல் திருட்டு சம்மந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கொழுமம் – ருத்திரபாளயைம் ரோடு முருகவேல் தோட்டம் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TATA ACE வண்டியை TN 78 Y 5864 நான்கு சக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் இருந்த மணல் மற்றும் அதை ஓட்டி வந்த ஓட்டுநரை பற்றி விசாரிக்க குருவக்களத்தைச் சேர்ந்த ஆத்தி மரத்தான் உடன் இருந்தவர்கள் செந்தில், முருகன் (எ)முருகானந்தம் ஆகியோர் உடன் இருந்தனர். பின்பு அவர்களை விசாரித்த போது அவர்கள் ருத்திரபாளையம் விநாயகர் கோவில் அருகில் உள்ள அமராவதி ஆற்று படுகையில் அரசு சொத்தான மணலை திருடி வந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை காலை 05.00 மணிக்கு

கைதிற்கான காரணம் கூறி கைது செய்தும் அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் இருந்த காவலர் நானும், காவலர் நாராயணசாமியும் இருவர் முன்னிலையில் TATA ACE வாகனத்தையும், அதில் இருந்த சுமார் ½ யூனிட் ஆற்று மணலையும் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும், காவலரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனத்தில் தான் எதிரிகள் அன்று மணல் கடத்தி வந்த வாகனம் ஆகும். **புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகள் தான் அன்று மணலை வாகனத்தில் கடத்தி வந்ததவர்கள் ஆவர். பின்பு நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ரகசிய தகவல் கிடைத்தது குறித்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மணல் திருடப்பட்டதாக சொன்ன இடத்திற்கு அருகில் தான் சங்கராமநல்லூர் பேரூராட்சி அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்கு புறம் புங்கணன் என்ற ஓடை உள்ளது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அந்த பகுதியில் சுற்றியும் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல மிக அருகில் வீடுகள் இல்லை. உதவி ஆய்வாளருக்கு காலை 04.00 மணிக்கு தகவல் கிடைத்தது. அப்போது நாங்கள் கொழுமம் பகுதியில் ரோந்து பணியில் இருந்தோம். சம்மந்தப்பட்ட இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும் அதனால் தான் நேரம் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு நேரம் அந்த இடத்தில் இருந்தோம் என்றால் சுமார் 1 ¼ மணி நேரம் இருந்தோம். காலை 05.30 வரை இருந்தோமா என்றால் அதற்கு மேலும் இருந்தோம்.

(2) மணல் அள்ள பயன்படுத்தும் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. எதை வைத்து மணலின் அளவு அளக்கப்பட்டது என்றால் உத்தேசமாக சொல்லப்பட்டது. வாகன

தணிக்கை செய்த நேரம் இருட்டாக இருந்ததா என்றால் அதிக இருட்டாக இல்லை. போதிய வெளிச்சம் இல்லாத சமயம் என்றால் சரியல்ல. வாகனத்தின் எண்ணை எப்படி பார்த்தேன் என்றால் வாகனத்தை நிறுத்தி வெறுங்கண்ணால் பார்த்தேன். இருட்டில் எப்படி எண் தெரிந்தது என்றால் டார்ச் அடித்து பார்த்தேன். வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் ஆத்திமரத்தான். அவரிடமிருந்து வாகனத்தின் சாவி கைப்பற்றப்பட்டது.

(3) மணல் திருட்டு சம்மந்தமாக தணிக்கை செய்ய சென்ற போது வருவாய் துறை அதிகாரிகளுக்கோ அல்லது பொது மக்கள் யாருக்கோ தகவல் சொல்லி அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் காவல் நிலையத்திற்கு வாகனத்தை கொண்டு செல்ல வேண்டும் என்று நாங்கள் சொன்னதன் பேரில் எதிரிகள் வந்தார்கள் என்றும், உண்மையில் வாகனத்தில் மணலை கடத்தி இருந்தார் அதற்கான உபகரணங்கள் வாகனத்தில் இருந்திருக்கும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:47:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : CC 232/2019 |
| Name | : Narayanasamy |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 2 மற்றும் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ம் ஆண்டு கொமரலிங்கம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது 06.01.2018ம் தேதி நானும், என்னுடன் பணிபுரிந்த காவலர் ராமச்சந்திரனும் உதவி ஆய்வாளருக்கு மணல் திருட்டு சம்மந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது கொழுமம் – ருத்திரபாளையம் ரோடு முருகவேல் தோட்டம் அருகே உதவி ஆய்வாளருடன், நானும், காவலர் ராமச்சந்திரனும் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சுமார் 05.00 மணியளவில் ருத்திரபாளையம் – கொழுமம் ரோட்டில் TATA ACE TN 78 Y 5864 வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் மணல் இருப்பது தெரிய வந்தது. வாகனத்தை ஓட்டி வந்த ஆத்திமரத்தான் மற்றும் அவருடன் உடன் இருந்த முரகன் (எ) முருகானந்தம் மற்றும் செந்தில் ஆகியோரை விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக கூறியவர்கள் பின் ருத்திரபாளையம் விநாயகர் கோவில் ஆற்று பகுதியில் மணல் எடுத்து வந்தது தெரிய வந்தது. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் சுயலாபம் கருதி திருட்டு

தனமாக மணல் எடுத்து வந்ததற்காக அதனை கைப்பற்றும் பொருட்டு பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்னாலும் மற்றும் காவலர் ராமச்சந்திரன் முன்னாலும் TATA ACE வாகனத்தையும் சுமார் ½ யூனிட் மணலையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும், காவலரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அ.சா.பொ.1 வாகனத்தில் தான் எதிரிகள் அன்று மணல் கடத்தி வந்த வாகனம் ஆகும். பின்னர் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். ஆஜர் எதிரிகள் தான் அன்று மணல் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஆவர். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பொதுவாக ரோந்து பணி மாலை 06.00 மணிக்கு காலை 06.00 மணி வரை இருக்கும். பொது நாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு தான் ரோந்து பணிக்கு செல்வோம். சம்பவத்தன்று கொழுமம் பகுதியில் ரோந்து சென்றதாக பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதைப் பற்றி தெரியாது உதவி ஆய்வாளர் தான் பதிவு செய்வார். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து என்றால் 5 மணிக்கு கிடைத்தது சாட்சி மீண்டும் 4 மணி என்று சொன்னார். அந்த நேரத்தில் நான் கொழுமம் மாரியம்மன் கோவில் பகுதியில் இருந்தேன். வாகன தணிக்கைக்கு காலை 04.10 மணிக்கு சென்றேன். வாகன தணிக்கை செய்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 3 கி.மீ தூரம் இடைவெளி இருக்கும்.

(2) மணல் திருட்டு வாகனத்தை தணிக்கை செய்யப்போவதாக எனக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். பொது மக்களையோ அல்லது வருவாய் துறையினரையோ அழைத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தணிக்கை சென்றதாக சொன்ன நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். வாகனம் ருத்திரபாளையம் – கொழுமம் ரோட்டில் வந்து கொண்டிருந்தது. முருகவேல் தோட்டத்திற்கு அருகில் தான் சங்கராமநல்லூர் பேரூராட்சி அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அதிகாலை நேரம் என்பதால் வேலைக்கு செல்லும்

மக்கள் நடமாட ஆரம்பித்துவிடுவார்கள் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வாகனத்தை ஆத்திமரத்தான் ஓட்டி வந்தார். சாவியை அவரிடம் இருந்து தான் கைப்பற்றினோம். இருட்டான நேரம் என்பதால் வாகனத்தின் எண் தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான் அலைபேசி வெளிச்சத்தில் பார்த்தேன். வாகனத்தில் எத்தனை யூனிட் மணல் இருந்தது என்றால் சுமார் ½ யூனிட் மணல் இருந்தது. எப்படி அளந்து பார்த்தோம் என்றல் உத்தேசமாக தெரிந்தது.

(3) வாகனத்தை எத்தனை மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனம் மற்றும் மணலை கைப்பற்றினோம். மணல் அள்ள பயன்படுத்தப்படும் கருவிகளை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னபடி சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் காவல் நிலையத்திற்கு வாகனத்தை கொண்டு செல்ல வேண்டும் என்று நாங்கள் சொன்னதன் பேரில் எதிரிகள் வந்தார்கள் என்றும், உண்மையில் வாகனத்தில் மணலை கடத்தி இருந்தார் அதற்கான உபகரணங்கள் வாகனத்தில் இருந்திருக்கும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:47:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 232/2019 |
| Name | : Thangavel |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 2 மற்றும் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தாராபுரம் கோட்ட கலால் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.07.2018 ம் தேதி உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக அலுவலில் இருந்த போது உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மூலமாக அனுப்பப்பட்ட கடித எண். 830/2018 நாள் 27.07.2018 ன் படி திருப்பூர் மாவட்ட கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். 7/2018 ச/பி 379 இதச– ன் படியான வழக்கில் பதிவு செய்யப்பட்ட சுமார் **1/2** யூனிட் மணலை கொமரலிங்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டு அதற்கான ஒப்புதல் கடிதம் 5980/2018 அ2 நாள் 31.07.2018 படி உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1க்கு சமர்ப்பிக்கப்பட்டது. **31.07.2018 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) மணலின் அளவு தோராயமாக அளக்கப்பட்டது. மணல் எந்த வகையானது என்று

பரிசோதிக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட மணலை வாங்கி பாதுகாப்பாக வைத்தோம்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:47:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்